இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 04.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் இன்று(04.01.2018) 2017–18ம் ஆண்டுக்கான 10வது யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் அதிகாலை 5.00 மணியளவில் ஆணையர் மற்றும் தலைமையிடத்து இணையர் ஆணையர் அவர்கள் முன்னிலையில் கணபதி ஹோமத்துடன் விழா துவங்கியது. மேற்படி கணபதி ஹோமத்தில் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், தலைமையிடத்து இணை ஆணையர், கோவை இணை ஆணையர் மற்றும் பண்ணாரி அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர், துறை அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், பாகன்கள், உதவி பாகன்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதன்பின்பு, முகாமிலுள்ள யானைகள் பூவாளி குளியல் மேடையில் நீராடி துவக்க விழாவிற்கு அலங்காரத்துடன் விழா நடைபெறும் இடத்திற்கு அழைத்து வரப்பட்டன. இவ்விழாவின் அடுத்த கட்ட நிகழ்வான துவக்க விழா சரியாக காலை 9.30 மணிக்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்களால் ரிப்பன் வெட்டி துவக்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை, இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர், துணை இயக்குநர் (வனக் கால்நடை பராமரிப்பு அலுவலர்), சென்னை தலைமையிடத்து இணை ஆணையர், கோவை இணை ஆணையர், திருநெல்வேலி இணை ஆணையர், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர், பண்ணாரி திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர், கோவை உதவி ஆணையர் சரிபார்ப்பு, கோவை உதவி ஆணையர், திருப்பூர் உதவிஆணையர், ஈரோடு உதவி ஆணையர், தேக்கம்பட்டி திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலர், ஆனைமலை திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலர், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர், கோவை இணை ஆணையர் மண்டல செயல் அலுவலர்கள்,

ஆய்வர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், யானைப்பாகன், உதவிப்பாகன்கள், வனத்துறைஅலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், இதர முக்கிய பிரமுகர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

விழா துவக்க நிகழ்வில் யானைகளுக்கு கரும்பு, அன்னாசிப்பழம், ஆப்பிள், உருண்டை வெல்லம், கருப்பட்டி முதலான உணவு வகைகள் ஆகியவை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர், தலைமையிடத்து இணை ஆணையர், கோவை இணை ஆணையர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் வழங்கப்பட்டது. யானைப்பாகன்கள், உதவிப்பாகன்கள், பத்திரிக்கை நிருபர்கள், தொலைக்காட்சி நிருபர்கள், பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பிக்க முகாம் இனிதே துவக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



